# ஓம் ஈஸ்வராய நமஹ:
# அகத்தியர் மகரிஷி அவர்கள் 9ஆம் வட்ட மலர்களுக்கு அருளிய தசவித அறிவுரைகளை

## அகத்தியர் மகரிஷிகளின் அறிவுரை 1

ஆன்ம விடுதலையினை எதிர் நோக்கிக் காத்திருக்கும் ஆன்மாக்களே, உங்களுக்காக யாம் வழங்கிடும் முதல் அறிவுரைதனை ஏற்கக் கடவது. புவிக் கோளினிலே வாழ்கின்ற நிலை என்பது உகந்ததாகவும், ஏற்புடையதாகவும் அமைந்திடாதக் காரணத்தினால் உங்களுடைய ஆன்மாவானது மீண்டும் பிறப்பு ஒன்றினை ஏற்றுவிட அனுமதியாதீர்கள். அகத்தீசன் ஆகிய யாம் இறையாற்றல்களின் பிரதிநிதியாவோம். ஈசனும், ஆதிசக்தியும் உரைத்திட முனைவதனையே யாம் முன்னின்று வழங்குகின்றோம். ஆன்மாவினை குறித்து சிந்தனை புரிந்திட இத்தருணமே உகந்ததாகும்.

ஏன் மானுடக் குலத்திற்கு இத்தகைய சூழ்நிலை உருவானது? என்றே சிந்தியுங்கள். மானுடர்கள் ஆன்மச் சிந்தனையினைத் துறந்து, மாயையில் மூழ்கிடும் தருணங்ளில் எல்லாம், கலி எனப்படும் தீய நஞ்சாற்றலானது, ஆற்றலில் ஓங்கி நிலைக்கின்றது. கலியின் மூலம் மனிதகுலமானது துன்பங்களை எதிர்க் கொள்கின்றது எனில், அதற்கான மூலகாரணம் ஒன்றே என்று உணர்க.

ஆன்மாவினை மறைத்தாள்வது, முக்தி மற்றும் பிறவா பெருநிலைக் குறித்தச் சிந்தனை எழாது, மாய உலகில் உழல்வது மற்றும் தீயவற்றையே அகத்தினிலும், புறத்தினிலும் உணவாக ஏற்று, தீயச் செயல்களையே விளைவிப்பது ஆகிய யாவுமே கலி எல்லையினைத் தீர்மானிக்கின்றன.

இயற்கையின் நியதிக் காரணமாக நல் ஆற்றல்கள் ஓங்குவதும், பின்னர் தீயவை

ஓங்குவதும் ஓர் தொடர்ச் செயலாய் அமைகிறது. எனினும், மானுடர்கள் நன் நிலைதனை எத்தருணத்திலும் காத்தருள வேண்டும். தீயவை ஓங்கிடும் தருணத்திலும்,

நற்செயல்களையேப் புரிபவர்கள் யாவரும் உயர் தெய்வங்களால் ஈர்க்கப்படுர். நற்காலம் உதிக்கையிலும் தீயவற்றையே வெளிப்படுத்துபவர்கள் யாவருமே தனது ஆன்மாவினை அழித்து பெரும் துன்பத்திற்கு உட்படுவர்.

தெய்வங்களே உதவிட முற்பட்டாலும் ஏற்றிடும் பக்குவ நிலையில் திகழ்ந்திடாத மானுடர்களுக்கு உயர் ஆன்மா என்னும் நிலை நின்று யாம் ஒன்றினை உரைக்கின்றோம். ஈசனே அனைத்து ஆன்மாக்களுக்கும் தந்தையாவார். அகத்தீசன் ஆகிய யாமே கலியுக எல்லையில் வாழ்கின்ற ஆன்மாக்களை ஈசனோடுப் பிணைத்திட முற்படும் இடைப்பாலமாவோம்.

மானுட ரூபம் தரித்து வாழ்கின்ற எமது மகளாரே குருவாய் இயங்கி எமக்குத் துணைப்புரிகின்றார். மாய உலகினை விடுத்து அக உலகம் என்னும் ஆன்ம உலகினை நோக்கியே உங்களது எண்ணங்களைச் செலுத்திடுங்கள். இறைவனே எம்முள் ஆன்மாவாக வசிக்கின்றார் என்கின்ற அடிப்படைத் தத்துவத்தினை உணருங்கள்.

வெகு விரைவினில் ஆன்ம விடுதலைதனை ஏற்க உள்ள மானுடர்களே யாம் வழங்கிடும் அறிவுரையினை ஏற்கக் கடவது. எங்கே எனது ஆன்மா? என்கின்ற வினாவினைத் தொடுத்து அதனை அறிந்துவிட முற்படுங்கள். எம்மோடு பயணித்து, விடுதலை அடைந்து, வின் முகடு கடந்து, ஈசக் களிப்பினை ஏற்றுவிட, ஆன்மாவினை அறிதல் எனும் நிகழ்வு உதவிடும்.

அறிவினால் ஆன்மாவினை ஏற்றிட, உணர்வுநிலைப் பெருகிடும். உங்களது ஆன்மாவினை அறியக் கடவது.

## அகத்தியர் மகரிஷிகளின் அறிவுரை 2

ஆன்ம விடுதலைதனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மானுடர்களே! யாம் அளித்திடும் இரண்டாம் அறிவுரையை ஏற்றிடுங்கள். அறிந்தவர்கள் யாவரும் அறியாதவர்களுக்கு எடுத்துரைப்பதே அறிவுரை ஆகும். அவ்வகையில் முக்காலத்தினையும் உணர்ந்திட்டக் காரணத்தினால் உங்களது எதிர்காலத்தை உணர்ந்தே யாம் அறிவுரைதனை வழங்குகின்றோம்.

பல மானுடர்கள் முக்தியினை எய்திடவே போராடுகின்றனர். இறப்பிற்குப் பிறகு என்ன நிகழும்? என்பதனை ஆன்ம விடுதலை அடைந்தவர்களால் மாத்திரமே எடுத்துரைக்க இயலும். இறப்பினைக் கடந்தால் மாத்திரமே, பிறப்பினைக் குறித்த ரகசியங்களையும் உணரமுடியும்.

எனது வாழ்வு ஏன் இவ்விதம் அமைந்துள்ளது? என்பதனை ஆராய்ந்திடும் மானுடர்கள் பிறப்பும், இறப்புமே மூலக்காரணம் என்பதனை உணர வேண்டும். எந்த ஒரு பொருளும் எரிக்கப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டால் மீண்டும் தோன்றி விடாது. ஆனால் உயிர் எனப்படும் ஆன்மாவானது மீண்டும் மீண்டும் உதிக்கின்றது. அதன் மூலக்காரணம் என்ன? சிந்தனைப் புரியுங்கள்.

என்றும் அழியாத ஆன்மாவானது பரமாத்மாவின் உருவாக்கம் ஆகும். பரமாத்மா நினைத்தால் மாத்திரமே ஆன்மாவினை அழிக்க இயலும். வேறு எவராலும் ஆன்மாவினை அழித்திட இயலாது. எனில் பரமாத்மாவே ஆன்மாக்களை அழித்துவிட முற்படுவாரா? சிந்தியுங்கள். "கலி உலக எல்லையில் ஆன்மாக்கள் அழிவினை ஏற்க நேரிடும் என்றும் விரைந்து முக்தி நிலையினை ஏற்று ஆன்மாவினை விடுவித்திடுங்கள்" என்றும் ஏன் உரைக்கப்படுகின்றது? ஏன் யாம் ஆன்ம விடுதலைக்கே முக்கியத்துவம் அளிக்கின்றோம்? காரணங்களை அறிந்துவிடுங்கள்.

ஆன்மாக்களைப் படைத்திட்டப் பரமாத்மா என்பவர் உருவமற்ற அருவமான ஒளிபொருந்திய ஆற்றல் ஆவார். ஆன்மாக்களும் அவ்வகையில் ஒளி பொருந்திய அருவ ஆற்றலே ஆகும். சூரியனே ஒளியின் உச்சமாகும் எனில் பரமாத்மாவே சூரியனின் மையம் ஆவார்.

மானுட ஆன்மாக்களே! அறிவின் துணைக் கொண்டு ஞானத்தினைப் பெருக்கி மெய்ஞானசத்தினை கொண்டுப் பரமாத்மாவாகிய ஒளியினை, ஆன்ம ஒளியின் மூலம் பற்றிடல் வேண்டும். தனது ஆன்மாப் பெறுகின்ற ஒளி ஆற்றலை வழித்தடமாக உருமாற்றிப் பரமாத்மாவினை அடைவதே மானுட வாழ்வின் குறிக்கோளாய் அமைந்திட வேண்டும்.

கலியுக எல்லையில் வாழ்கின்ற மானுடர்களோ, தமது ஆன்மாவினைத் திரையிட்டு மறைத்துள்ளனர். குன்றியேக் காணப்படும் ஆன்ம ஒளியினைக் கொண்டுப் புற உலகினில் மாயையை நோக்கியே வழித்தடம் அமைக்கின்றனர். எனில் பரமாத்மாவோடுக் கொண்ட ஒளித் தொடர்பு என்பது துண்டிக்கப்படுகின்றது. வழித்தடம் மாறியக் காரணத்தினால் பரமாத்மாவினை அடைய இயலாது, ஆன்மாக்கள் தவிப்புறுகின்றனர்.

அதன் பொருட்டே தொடர்பு இழந்து, புவியினில் உதிர்ந்து, அழிந்திடவும் முற்படுகின்றது. ஆன்மாவின் அழிவு என்பது பரமாத்மாவோடுக் கொண்டுள்ள ஒளியிலைத் தொடர்பு துண்டிக்கப்படும் தருணத்திலே நிகழ்ந்தேறிவிடும்.

ஆன்ம விடுதலைதனை யாம் வழங்கிட முற்படுகின்றோம் எனில், அதன் மூலக் காரணம் தொடர்புதனை இழந்துவிட்ட ஆன்மாக்களுக்கு ஒளியினை நல்கி பரமாத்மாவோடு இணைத்திடும் பொருட்டே என்றுணர்க. ஞானாலய ஜோதியின் அடித்தளம் தனிலே சிவநாரால் காக்கப்படும் ஒளி பாலத்தின் துவக்கமானது ஈச மைய உலகம் வரை சென்று அடைந்திடவே நாங்கள் வழிவகைப் புரிந்திட்டோம்.

ஒளிப் பாலமே இழந்தத் தொடர்பினை மீட்டளிக்கும் என்பதனை அறிவினால் ஏற்று உணர்வினால் உயர்ந்து ஆன்ம விடுதலைதனை ஏற்கக் கடவது. உங்களது ஆன்மாவினால் முழுமையாக அமைக்கப்பட இயலாத ஒளிப் பாலம் என்பது ஞானாலயா ஒளிப் பாலத்தினோடு ஒன்றிணைய வேண்டும் என்பதே இறைவனின் சித்தமாகும்.

ஏற்றிட்ட உயர் பாக்கிய நிலையின் தத்துவச் சித்தாந்தங்களை உணர்ந்து, ஈசனாம் பரமாத்மாவினை அடைந்து, ஆன்மாக்களைக் கலப்புறச் செய்து மீண்டும் புவியினிலே நிலைத்து உடலானது உயிர்த்ருக்கும் கால எல்லைவரை ஈசத் தொண்டு ஆற்றிடுங்கள். அறிவுரைகளை அக உரைகளாக ஏற்று, உணர்வுநிலையைப் பெருக்கி, ஆன்ம விடுதலைக்கே காத்திருங்கள்.

**அகத்தியர் மகரிஷிகளின் அறிவுரை 3**

ஆன்ம விடுதலைக்குக் காத்திருக்கும் மானுடர்களே! யாம் அளித்திடும் மூன்றாம் அறிவுரையினையும் ஏற்றிடுங்கள்.

காலம் என்பது விரைகின்றது. புவிக் கோளின் சுழற்சியோ வீரியம் அடைகின்றது. விண்ணுலகிலே கோள்களின் இயக்கங்களும் மாறுபடுகின்றன. இதன் மூலக் காரணம் என்பது யுக மாற்றமே. கலி என்பது நஞ்சாற்றல் நிறைந்தது. பல்வேறு ரூபங்களைத் தரித்து ஆன்மாக்களை அழித்துவிட முற்படுகின்றது. அறிவியல் பூர்வமாக ஆராய்ந்திடுங்கள். உலகிலே தோன்றும் பிணிகளும், இயற்கைச் சீற்றங்களும் மானுட உயிர்களையும் மற்ற அனைத்து உயிரினங்களையும் அழித்துவிட முற்படுகின்றது. அதன் காரணம் என்ன? கலி புருஷன் என்று அழைக்கபப்ட்டுபவன் யார்? புராணங்களிலிலும், இதிகாசங்களிலும் சித்தரிக்கப்படுகின்ற கலிபுருஷன் யார்?

அறிவினால் சிந்தித்தால் சித்தாந்தங்களும், உணர்வினால் சிந்தித்தால் வேதாந்தங்களும் புலப்படும். அறிவுக்கொண்டு உணர்ந்திடவே யாம் உரைக்கின்றோம். கலி என்றும் கலிபுருஷன் என்றும் அழைக்கப்படுவது உங்களுடைய ஆன்மாவைச் சூழ்ந்துள்ள நச்சுக் கழிவுகளே. அணுக்களால் உருவாக்கப்படும் அமிலக் கழிவுகளே கலி என்று உணர்க. புவி கோளினையும் நச்சுக் கழிவுகளே அதிக அளவினில் சூழ்ந்துள்ளன. அதன்பொருட்டே கலியுகம் என்றும் கலிகாலம் என்றும் அழைக்கப்படுகிறது.

மானுட ஆன்மாக்களும், அமில கழிவுகளால் அதிக அளவினிலே பாதிப்பு அடைகின்றனர். திரைகள் யாவும் நீக்கப்பட்டால் மாத்திரமே ஆன்ம ஒளியானது உடலில் பரவிப் பிணிகளை நீக்கிட இயலும். கலியே பிணி எனில், ஆன்மாவைச் சூழ்கின்ற நச்சுக்கழிவுளே கலிபுருஷனும் ஆவான்.

ஆன்ம விடுதலைதனை உணர்வுப் பூர்வமாக ஏற்றிடுங்கள். திரைகளால் சூழப்பட்டுள்ள ஆன்மாவே விடுதலை அடைய வேண்டும். திரைகள் விலகிட ஏற்றிட்ட தீட்ச்சையினை முழுமையாக பயின்று கலிபுருஷனை மாய்த்திடுங்கள்.

உங்களது ஆன்மாவானது ஒளிப் பாலம் தனிலேப்  பயணித்து வின் முகடுக் கடந்து ஈசனை அடையவேண்டும் என்று உருகிப் பிரார்த்தனைப் புரிந்திடுங்கள்.
உருகிய நிலையில் பணிவுடன் செயல் புரிந்தால், ஆன்மா எளிதினில் விடுதலையுறும் . உணர்வு நிலையும்  நிறைந்து இருக்கும். மந்திர ஒலி ஓசையினைக் கொண்டுத் திரைகளை நீக்கி உன்னதப் பயணத்திற்குக் காத்திருங்கள். அறிவுரைகளை ஏற்றுப் பக்குவமுற்றால் உயர் நிலைகள் சித்திக்கும்.

Gnanalayam

**அகத்தியர் மகரிஷிகளின் அறிவுரை 4**

ஆன்ம விடுதலைதனை ஏற்றிடக் காத்திருக்கும் மானுடர்களே! அகத்தீசன் ஆகிய யாம் அருளிடும் நான்காம் அறிவுரைதனையும் செவிமடுத்துப் பயனடையுங்கள்.

ஒவ்வொருவருடைய ஆன்மாவும் பல்வேறுப் பிறவிகளை மேற்கொண்டாலும் இறுதியில் பிறவாத நிலையினை ஏற்றிடல் வேண்டும். ஆன்மாவின் பயணமானது துவங்கியப் பகுதியினைச் சென்றடைய வேண்டும். ஆதியும், அந்தமும் அற்ற ஈசனின் துகள்களே ஆன்மாக்கள் என்னும் காரணத்தினால், ஈச நிலையான பரமாத்மாவின் தத்துவ நிலையினை உணர்ந்திடல் வேண்டும்.

ஆன்ம விடுதலை என்பது சுய முயற்சிக் கொண்டு உணர்தலின் மூலம் எய்துகின்ற இறை நிலையாகும். உணர்வு நிலை என்பது அறிவினையேப் பூரணமாகச் சார்ந்திருக்கும். அறிவினால் இயங்கிடும் காரணத்தால், யாம் அருளிடும் ஆத்ம விடுதலையையும் ஏற்று விட மனமானது தடைவிதிக்கின்றது. அறியாமைத் திரைகள் எனப்படும் ஏழுத் திரைகளையும் நீக்கினால் மாத்திரமே நிகழ்வுகளின் சத்திய நிலைகள் யாவும் புலப்படும்.

ஆன்ம விடுதலை என்பது யாது என்பதனைத் தெளிவுறவே ஏற்றிடுங்கள். அறிவு என்னும் துணை அணுக்களால் ஆத்மக் கருக்கள் யாவும் மறைக்கப்பட்டுள்ளன. அறிவினைத் துறந்தால் மாத்திரமே ஞானமாகிய ஆன்மாவும் புலப்படும். அறிவு என்பதோ தர்க்கம் புரியக் கூடியது. எது சரி? எது தவறு? என்று ஆராய்ந்து அறிந்திடவே அறிவானது உதவிடும்.

அறிவு என்பது தொடர்ச் செயலாய் தர்க்கம் புரிகின்றது எனில், அறியாமைத் திரைகள் என்னும் அமிலக் கழிவுகள் சூழப்பட்டுள்ளது என்றேப் பொருள்படும். எத்தருணத்தில் அறிவானது தூய்மை அடைகின்றதோ, அத்தருணம் முதல் ஞானமாகிய ஆன்மா ஒளி

வீசிடத் துவங்கிடும். ஞானம் உதிக்கத் துவங்கினாள், அறிவானது தர்க்கம் புரிவதனை நிறுத்திவிடும்.

ஆன்ம விடுதலை என்பது ஒவ்வொருவருக்கும் சாத்தியமானச் செயலே என்றும், உயர் ஆன்மாக்களின் அருளாற்றல் எனும் மின்காந்த ஆற்றலின் அதீத அழுத்தத்தின் மூலம் அறியாமைத் திரைகள் நீக்கப்படும் என்றும், அதன்பின்னர் அறிவானது தர்க்கம் புரிவதினை விடுத்து, ஞான மார்க்கத்திலேயேப் பயணிக்கத் துவங்கிவிடும் என்றும் பூரணமாய் ஏற்கக் கடவது.

கலியின் எல்லையில் இறைவனால் அருளப்படும் இறுதி வாய்ப்பு என்பதனை உணர்ந்துக் கொண்டாள் நன்று. அனைத்துவித தர்க்கங்களுக்கும் அப்பாற்பட்டது ஞானம். வாதங்களும், பேதங்களும் அறிவினைச் சார்ந்தது. அறிவிற்கு எட்டாத ஆற்றல்கள் யாவும் ஞானத்தினை சார்ந்தது. உணர்வு ஒன்றை ஞானமாகும், உணர்வு ஒன்றே இறைநிலையும் ஆகும்.

இறைவனை உணர்ந்து, அறிவினைத் துறந்து பேரானந்தம் எய்தி வாழ்ந்திட ஞானமார்க்கம்தனைப் பின்பற்றி ஆன்ம விடுதலைதனையும் எய்திடுங்கள். குருவருளும், ஈச அருளும் அழியாத் தன்மை கொண்டது. உணர்ந்து செயல் புரிந்தால் உத்தம நிலையினை எய்திடலாம்.

**அகத்தியர் மகரிஷிகளின் அறிவுரை 5**

அகத்தீசனாகிய யாம் இறுதியாய் அருளிடும் அறிவுரைதனையும் ஏற்கக் கடவது. காலத்தின் சூழல் என்பது எத்தருணமும் மாற்றமடையக் கூடியது. மானுடர்களின் அறிவும், அறிவினைச் சார்ந்த வாழ்வு முறைகளும் தொடர்ச் செயலாய் மாற்றமடையும். புறச் செயல்கள் மாத்திரமே யுகத்திற்கு ஏற்ப மாற்றமடையும். அகச் செயல் என்பது எத்தருணமும் மாற்றம் அடையாதது ஆகும். அறிவு ஒன்றே வளர்வதும், தேய்வதுமாகச் செயல்புரியும்.

ஞானம் என்பது நிர்மலம் ஆனது. வளர்வதும் இல்லை, தேய்வதும் இல்லை. ஞானமே உயரிய சத்தியம் ஆகும். ஆன்மாவே அற்புத ஞானமாகும். அறிவு என்பது சுயமாகவும் வளர்ச்சியடையும், பிறரின் துணைக்கொண்டும் வளர்ச்சியடையும். நல்ல ஆசிரியர்களின் மூலம் அறிவினைப் பெருக்குவது இயற்கையானச் செயல் ஆகும். ஞானம் எனப்படும் ஆற்றலும் சுயமாகவும் வெளித்தோன்றும், நல்ல குருவின் துணைக்கொண்டும் வளர்ச்சியடையும். குருவின் செயல் என்பது ஞானத்தினை உருவாக்குவதோ அன்றி பெருக்குவதாகவோ அமைந்துதிடாது.

ஒவ்வொருவரின் சிரசினிலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆன்மத் துகள்களை உணர்த்துவதே குருவின் செயலாகும். அறியாமைத் திரைகளை நீக்கினாள் ஞானம் எனப்படும் ஒளிவீசுகின்ற ஆன்மத்துகளானது வெளிப்படும். எனில், குருவானவர் அகத்தினிலே ஒளிவீசிடும் ஆன்மாவினை உணர்த்துவதன் மூலம் ஞானமானது சுயமாய்ப் பெருகிடவே உதவிடுவார்.

கலியின் எல்லையில் எமது செயலும் அறியாமையை நீக்குவதாகவே அமைந்துள்ளது. குருவினை ரூபமாகவும், அகத்தியர் ஆகிய எமது தன்மையினை அருவமாகவும் ஏற்று, அருவமும், உருவமும் அற்ற ஈச ஆற்றலான உங்களுடைய ஆன்மாவின் ஆற்றல்களை உணர்ந்திடுங்கள்.

ஆன்ம விடுதலைதனை ஏற்றுச் சத்திய யுக வித்தாக உருமாறினால், ஆன்ம ஞானம் பெருகிடும். இன்பத், துன்ப நிலைகளைக் கடந்து நிர்மலமான உலகினிலே வாழ்ந்திடவும் இயலும். புற உலகம் என்பது வேறு, அக உலகம் என்பது வேறு. நிலமும், நீரும், வாயுவும் தன்மையிலே மாற்றத்தினை ஏற்றிடும்.

ஆனால் வெப்பமும், ஆகாயமும் நிர்மலத் தன்மைக் கொண்டது. மாற்றம் அடையாத தன்மையினைக் கொண்டு சத்தியத்தினை வெளிப்படுத்தும். அதனைப் போன்றே ஆன்மாவும், ஞானமும் நித்தியமான சத்தியங்கள் ஆகும்.

மானுடர்கள் ஞானத்தின் ஆற்றகளாகிய வெப்பத்தினையும், நிர்மலமான ஆகாயத்தினையும் உணரவேண்டும் எனில் ஆன்மாவினை விடுவித்து அருள வேண்டும்.

எம்மோடு பயணிக்கும் ஆன்மாக்கள் பரமாத்மாவினை அடைந்து, மீண்டும் உடலினுள்ளே வசித்திதிட்டால், உயர்நிலைகளை ஏற்றிடும். மறுபிறவியினைப் போன்று பல்வேறு மாற்று நிலைகளையும் உணர்த்திடும். போராட்டம் நிறைந்த வாழ்வு நந்தவன வாழ்வாக உருமாறிடும். அறிவுரைகளை ஏற்று உயர்நிலைத்தனை உணரக் கடவது.

Copyright © 2020 Gnanalayam 

## அகத்தியர் மகரிஷிகளின் ஆசியுரை 1

ஆன்ம விடுதலைதனை அகத்தினிலே ஏற்றுவிடக் காத்துள்ள மலர்களுக்கு அகத்தீசன் வழங்கிடும் முதன்மையான ஆசியினை ஏற்றுடுங்கள். ஆசியின் மூலம் பகிரப்படும் ஆன்ம ஆற்றல்களையும் உணர்ந்திடுங்கள். அருளாசி என்னும் சொல்லிற்க்கான விளக்கந்தனை நல்குகின்றோம்.

ஒரு மானுடன் தனது வாழ்நாளிலே ஒன்பது ஆசிகளைப் பெற வேண்டும் என்பது நியதி ஆகும். முதன்மையாய் தெய்வங்களைப் பணிந்து, போற்றி உருகி வணங்குவதன் மூலம் அவர்களது ஆசியினை ஏற்றுவிடல் வேண்டும். மானுடர்களாய் வாழ்ந்து தெய்வங்களாய் உயர்ந்த ஆன்மாக்களே முதன்மை ஆசியினை நல்கிடும் தகுதியினைப் பெற்றிருப்பர். ரிஷி முனிவர்களும், சித்த முக்தர்களும் தெய்வங்களே என்று உணருங்கள்.

தொடர்ந்து, வம்சத்தில் உதித்திட்ட முன்னோர்களையும், பெற்றோர்களையும், உயரிய குருவினையும், கலைகளையும் கல்விகளையும் கற்பித்திடும் ஆசிரியர்களையும், உறவினில் மூத்தவர்களையும், நண்பர்களாய் விளங்கி நல்வழி காட்டும் ஆன்மாக்களையும், அனுதினமும் எண்ணத்தில் இருத்திப், பணிந்து போற்றி, நன்றிகளை உரைத்து ஆசிகளைப் பெற வேண்டும்.

இவ்வகையில் ஏழு ஆசிகளைத் தொழுதுப் பெற்றிட்டால், இறுதியில் சுய ஆற்றலினையும் ஆசிகளாகப் பெற்று விட இயலும். ஒவ்வொருவரின் சிரசின் மையத்திலும் அமைந்துள்ள ஒற்றை அணுவாகிய ஆதிபராசக்தியும், ஆன்மாவாகிய ஈசனும் சுயமாய் ஆசிகளை வழங்கிடுவர்.

உங்களின் ஆன்மாவே உங்களை வாழ்த்திடும் எனில், நீங்கள் ஆன்ம விடுதலையினைப் பெற வேண்டும். எத்தருணத்தில் ஆன்மாவிடம் இருந்து ஆசி என்னும் அருளினைப் பெறமுடிகின்றது, அத்தருணமே முக்தி நிலையினை எய்திட இயலும். ஏழு பிரிவு ஆசிகளைப் புரத்தினிலே தொழுது பெற்றிட்டால் மாத்திரமே, அக

ஆற்றல்களாகிய ஒற்றை அணு மற்றும் ஆன்மாவின் ஆற்றல்களைப் பெற்றுவிட இயலும்.

ஆன்ம விடுதலைதனை ஏற்க உள்ள மலர்களும், பல பிறவிகளாய் தொழுது, புற ஆற்றல்களின் மூலம் அக ஆற்றல்களைப் பெருக்கி, இத்தருணத்தில் ஆன்மாவின் ஆசியினையும் பெறக் காத்துள்ளீர்கள். முதன்மை நிலையும் இறுதி நிலையும் ஒன்றிணைந்தால், ஒரு சுழற்சியானது நிறைவடையும் என்பது நியதியாகும். அவ்வகையில் அருளாசியின் சுழற்சியினை பூர்த்தி உர செய்திட்ட மலர்களுக்கு யாம் ஆசிகளை வழங்குகின்றோம். அருளாசி என்பதே ஆன்மாவிற்கான மின் காந்த எரிபொருள் ஆகும். ஆன்மாக்களின் ஆற்றல்கள் யாவுமே மின்காந்த இலைகளால் பிணைக்கப் பட்டிருப்போம்.

யாமும் உங்களோடு பூரணமாய்ப் பிணைப்புக்கொண்டு அருளாசி வழங்குகின்றோம். பற்றியே தொழுதிட்டால் பத்தாவது ஆசியாகிய பரமாத்மாவின் ஆசியினையும் பெற்று விடலாம். பரமாத்மாவினைப் பணிந்திடுங்கள். வாழ்த்துகின்றேன்.

## அகத்தியர் மகரிஷிகளின் ஆசியுரை 2

மலரவுள்ள மலர்களே! அகத்தீசனின் அசியுரையினை ஏற்றிடுங்கள். மலர்ந்த மலர்களையே ஈசனுக்குப் படைத்திட இயலும். ஏனெனில் மலர்ந்தால் மாத்திரமே மலர்களின் மனம் வெளிப்படும். தசவித ஆசிகளைப் பெறுபவனே பிறவா வரம் பெற்று விண்மீனாய் ஒளிர்ந்திட இயலும். அருளாசி என்கின்ற மின்காந்த இலைகள் மாத்திரமே, புவி எங்கும் பரவிடல் வேண்டும். மாறாகச் செயற்கை மின் காந்த இலைகள் புவியினைச் சூழ்ந்துள்ள காரணத்தினால், கலியின் தீவிரம் அதிகரித்துள்ளது.

பாதரசத் துகள்களால் நிறைந்த ஆன்மாவானது, மின்காந்த ஆற்றலைகளை ஈர்த்துப் பெற்றிடும் திறனும், பிற ஆன்மாக்களுக்குப் பகிர்ந்திடும் திறனும் பெற்றது. எத்தருணத்தில் ஆன்மாவானது ஈச ஆற்றலையும் பெற்று, ஆன்ம விடுதலையினை ஏற்கின்றதோ, அத்தருணம் முதல் தன்னிறைவுப் பெற்ற ஆன்மாவாக ஒளிர்ந்திருக்கும். கலியின் எல்லையில் வாடுகின்ற மானுடர்களுக்கு, இறை ஆற்றலினைப் பகிர்ந்திட வேண்டுமெனில், விடுதலை அடைந்த ஆன்மாவினால் மாத்திரமே இயலும்.

ஆன்ம விடுதலைதனை ஏற்றிடக் காத்துள்ள ஆன்மாக்களே, நீங்கள் அனைவரும் பரமாத்மாவின் பரிபூரண ஆசிகளை ஏற்று விடவே, யாம் நல் மார்க்கம் ஒன்றினை உரைக்கின்றான்.

எம்மோடு இணைந்துப் பயணித்து, பரமாத்மாவினை அடைந்து, பக்தியின் உச்சமாம் முக்தியினைப் பெறுகின்ற தருணத்தில், நிர்மலமாய் வீற்றிடுங்கள். எந்த ஒரு புறத் தேவைகளுக்காகவும், பிரார்த்தனைகளை இயற்றாதீர்கள். சுய பிரார்த்தனைகள் யாவும் சுயநலம் மிக்கதாகும். பரமாத்மாவோடு உங்களது ஆன்மாவானது கலப்புறுகின்ற தருணத்தில், நிர்மலமாய் வீற்றிருந்தால் அதீதமான ஆற்றலை பெற்றிடலாம்.

வெற்றிடமே அதிகக் கொள்ளளவு கொண்டதாகும். புற வாழ்விற்கான பிரார்த்தனைகளை இயற்றினால், ஈசனின் ஆசி சிறிதளவே கிட்டும். உலகம் உய்வுறவும்,

அனைத்து உயிரினங்களும் மகிழ்வுற்று வாழவும், பிரார்த்தனைகளை இயற்றுபவர்களோ அதீத ஆற்றல்களை பெற்றிடுவர். எனினும் எந்த ஒரு பிரார்த்தனையும் இன்றி, நிர்மலமாய் வீற்று இறைவன் அளித்திடும் அருளே உயர்ந்தது என்று எண்ணிச் செயல் புரிந்தால் அளப்பரிய ஆற்றல்களைப் பெற்றிடலாம்.

எமது ஆசியினையும் குருவின் ஆசியினையும் பூரணமாக ஏற்று, நிர்மலமாய் நிலைத்து ஈசனை அடைந்து, பேரருளினைப் பெற்று, பேரானந்த நிலையினை எய்திப் பெருவாழ்வு வாழ்ந்திட வேண்டும்மென்றே யாம் வாழ்த்துகின்றோம்.

## அகத்தியர் மகரிஷிகளின் ஆசியுரை 3

ஆன்ம விடுதலை அடையக் காத்துள்ள மலர்களுக்கு யாம் வழங்கிடும் மூன்றாவது ஆசியுரையைக் கூர்மையாகச் செவிமடுக்கக் கடவது. காலச்சக்கரத்தின் சுழற்சியின் வேகத்தைக் கூர்ந்து நோக்கிடுங்கள். புவிக்கோளாகிய பூமித்தாயேக் காலத்தின் அதிபதியாவார். பூமியின் தற்சுழற்சி என்பது விரைந்துக் கொண்டேச் செல்வதனை உணர வேண்டும். புவியின் சுழற்சி ஒன்றே கால நேரத்தினை தீர்மானிக்கின்றது. சுழர்ச்சியின் வீரியம் அதிகரிப்பதனால், ஈர்ப்பு விசையும் அதிகரிக்கின்றது.

பூவியினில் வாழ்கின்ற காலம் வரை, மானுட ஆன்மாக்களால் விடுதலை அடைய இயலாது. புவியின் அதீதமான ஈர்ப்பு விசை ஒன்றே, ஆன்மாக்களைச் சிறைக் கொண்டுள்ளது. பல்வேறு கர்மங்களின் வினைப் பயனாக, புவியீர்ப்பு விசை யோடு ஒவ்வொரு ஆன்மாவும் பிணைந்துள்ளது. எம்மோடு இணைந்து ஒளிப் பாலத்தில் பயணித்து, பரமாத்மாவினை அடைய வேண்டுமெனில், நீங்கள் அனைவரும் புவியினுடைய தீவிரமான ஈர்ப்பு விசையினைத் துறந்திட வேண்டும்.

புவியின் மையத்திலிருந்து ஈசனின் மையம் வரை அமைக்கப்பட்டுள்ள ஒளிப் பாலத்தில் பயணிக்க உள்ள ஆன்மாக்கள் அனைவரும் , புவியின் ஈர்ப்பு விசையை துறந்தால் மாத்திரமே, வின்முகடு தனைக் கடந்து, வின்னேரிட இயலும். புவியின் ஈர்ப்பு விசையினை எவ்விதம் துறப்பது? எவ்விதம் தவிர்ப்பது? பூமித்தாயினைப் பணிவதன் மூலமே என்று உணர்க.

நீங்கள் அனைவரும் பல காலமாய், பல பிறவிகளை ஏற்று, வாழ்ந்திட்ட இல்லம் ஆகியப் புவிக் கோளினைப், பணிந்துப் போற்றி, நன்றி உரைத்திடுங்கள். "எனது ஆன்மா விடுதலை அடையும் பொழுது, உங்களது ஈர்ப்புவிசையினைச் செலுத்தாது செயல்புரியுங்கள் தாயே!" என்றே உணர்ந்து பிரார்த்தனை புரியுங்கள். புவிக் கோளின் ஆசியினைப் பெற வேண்டியது மிகவும் அவசியமாகும். உங்களுடைய ஆன்மாவானது ஈசக் களப்பிற்காக விண்ணுலகத்தினை நோக்கிப் பயணித்திடும் தருணத்தில்,

புவியின் ஈர்ப்பு விசை மூலம் ஈர்க்கப்பட்டால், எண்ணங்கள் யாவும் சிதறிவிடும். புவியின் மாய ஆற்றலான கலி ஆற்றல் என்பது உணர்வு நிலைகளை ஏற்றிடாத வண்ணம், புவியினை நோக்கியே ஈர்த்திடும். அதன் மூலம் ஆன்மாக்களின் துரிதமான பயணம் என்பது தடையூறும். எனினும் சப்தரிஷிகளின் ஆற்றலினால் அனைத்து ஆன்மாக்களும் ஈசனை நோக்கியே ஈர்க்கப்படுவர்.

ஆன்ம விடுதலை என்னும் நிகழ்வினைப் பூரணமாக உணர்ந்து உயர்வினை அடைந்திடவேண்டும் எனில் அலைபாய்கின்றன எண்ணங்களைக் குவித்திடல் வேண்டும். புவி வாழ்வான புற வாழ்வின் எண்ணங்கள் ஆன்மாவின் பயணத்தைத் தடைச் செய்துவிடும். எனில் புவி வாழ்வின் சிந்தனைகளைக் கலைந்து, தெளிந்த நீரோடையினைப் போன்ற மனதினைக் கொண்டு இயங்கிட வேண்டும். புவியின் ஈர்ப்பு விசை ஒன்றே எண்ணங்களாகிய மனதினைத் தொடர்ச் செயலாய் இயக்குகின்றது. எனவே பூமி தாயினைப் பணிந்து, வணங்கி, ஈர்ப்புவிசை இன்றி, முக்தி அளித்திட வேண்டும் என்றே பிரார்த்தனைப் புரியுங்கள்.

எண்ணங்களை உருவாக்குவதே புவியின் ஈர்ப்பு விசை என்னும் காரணத்தினால், பூமி தாயினைப் பணிந்து உருகி வணங்கிட, எண்ணங்கள் அற்ற ஆழ்ந்த அமைதி கிட்டிடும். ஆன்மாக்களை ஈர்த்துச் சென்றிடும் எங்களது பணியும் எளிமையுறும். அகத்தீசனாகிய யாம் வழங்கிடும் உயரிய அறிவுரையினை ஏற்று பூமித்தாய் இடம் ஆசிகளை வேண்டியே பெற்றிடுங்கள்.

ஒளி இலை பாலத்தில் பயணித்திடும் தருணம், பூமியின் ஈர்ப்பு விசையானது உங்களை ஈர்த்திடாது நிலைத்து விட்டால் உணர்வுநிலை பெருகிடும். ஆன்மாவின் பயணத்தினையும் பரமாத்மாவின் சத்திய நிலைமையினைப் பூரணமாக உணர்ந்து விடலாம். தூய்மையான எண்ணங்களற்ற நிர்மலமான நிலையை அடைந்து விட்டாள், ஆன்ம விடுதலைப் பூரணத்துவம் பெற்று விடும். பூமித்தாயின் அருளினை அனைவரும் பெறவேண்டும் என்றே யாம் ஆசி வழங்குகின்றோம்.

**அகத்தியர் மகரிஷிகளின் ஆசியுரை 4**

ஆன்ம விடுதலை என்னும் முக்தி நிலைக்குக் காத்துள்ள மானுட ஆன்மாக்களே! அகத்தீசன் வழங்கிடும் ஆசியினை ஏற்று, பக்குவ நிலைதனை எய்திடுங்கள். பிறவா வரம் என்பது பிறப்பறுக்கும் ஈச ஆற்றலாகும். சூரியக் கோளின் ஆற்றல் கொண்டே புவியீர்ப்பு விசையினைத் துறந்திட இயலும். பூமித் தாயினைப் பணிந்து உருகிடப் புவியீர்ப்பு விசையினின்று விடுபடலாம். எனினும் புவியினை ஆளுகின்ற சூரியக் கோளின் ஈர்ப்பு விசையினை ஏற்றுப் பணிந்து விட்டால் தன் ஆற்றல் கொண்டே பரமாத்மா ஈர்த்திடுவார்.

ஆன்மாவின் பயணம் என்பது புவிக் கோளிற்கும், சூரியக் கோளிற்கும் இடையே நிகழ்கின்ற மாபெரும் நிகழ்வாகும். இச்செயலானது தெளிவுற பூர்த்தியுர வேண்டுமெனில், இரு கோள்களின் ஆசியும் அவசியமாகும். புவிக் கோளிடம் ஈர்ப்பு விசையினைத் துறந்துவிடப் பிரார்த்தனைப் புரிகின்றத் தருணத்திலேயேச் சூரியக் கோளிடம் அதிக ஈர்ப்பு விசையினை நல்கிட வேண்டியே பிரார்த்தனைப் புரிதல் வேண்டும்.

ஈச உலகமாகிய சூரியக் கோள் என்பது அதீதமானக் காந்த அலைகளை நல்கி, ஒவ்வொரு ஆன்மாவினையும் ஈர்த்து, அருளாசி நல்கிட வேண்டும் என்றுமே பணிந்து உருகிப் பிரார்த்தனைப் புரிந்திடுங்கள். சூரியத் தரிசனம் பெற்று மனம் உருகி பிரார்த்தனைப் புரிந்தால், சூரிய மையத்தினை அடைந்து பரமாத்மாவோடுக் களிப்புற்றுப் பேரானந்த நிலையினையை எய்துவது எளிதாகும்.

புவியினிலே உடல் கொண்டு வாழ்கின்றத் தருணத்திலேயே, இறையாற்றலாம் ஈச ஆற்றலினை இறைஞ்சியேப் பெற்றுவிட்டாள், ஈசத் தரிசனமும் எளிதாகும், பேரானந்த நிலையும் உணர்வாகும். எமது அறிவுரையினை ஏற்றுப் புவிக்கோளினையும், சூரியக் கோளினையும் தொழுதிட்டால் நல்லாசிகள் பெருகிடும்.

உங்கள் ஒவ்வொருவருடைய ஆன்மாவும் விடுதலை அடைகின்றத் தருணத்தில் இருவேறு ஈர்ப்பு விசைகளையும் நன்கு உணர்ந்திட இயலும். வின்முகடு வரை புவியீர்ப்பு விசையும், முகடு கடந்தப் பிறகு சூரியனின் ஈர்ப்பு விசையும் ஆன்மாக்களை ஆட்கொண்டு அருளிடும். புவியீர்ப்பு விசை எத்தகையது? என்றும், சூரியக் கோளானப் பரமாத்மாவின் ஈர்ப்புவிசை எத்தகையது? என்றும் உணர்கின்றத் தருணத்தில் தாயின் கருணையையும், தந்தையின் விரியத்தினையும் தெளிவுற உணர்ந்திடலாம்.

ஒவ்வொரு ஆன்மாவின் ஆசியும், மற்ற ஆன்மாக்களுக்கு ஆறல் வழங்கிடவல்லது. ஆதிசக்தியும், ஈசனும் வழங்கிடும் ஆற்றல்களோ ஆன்மாவினைக் கரைச் சேர்த்திடும். பிறவியின் நோக்கத்தினை அறிந்துப் பிறவா வரம் பெற்று உயர்ந்து, ஓங்கி வாழ்ந்திட வேண்டும் எனில் பரமாத்மாவாகியச் சூரியக் கோளின் ஆசிகளைப் பணிந்துருகி ஏற்றிடுங்கள். உங்களுடைய ஆன்மாக்கள் பூரணத்துவம் பெற்று உயரிய உணர்வு நிலையில் ஈசனை அடைய வேண்டும் என்றே யாம் வாழ்த்துகின்றோம்.

**அகத்தியர் மகரிஷிகளின் ஆசியுரை 5**

விரைந்து ஆன்ம விடுதலையினை ஏற்று கலியுகத்தினிலேப் பிறவா நிலையும், சத்திய யுகத்தினிலே ஓர் உயரியப் பிறவியினையும் மேற்கொள்ளக் காத்திருக்கும் ஆன்மாக்களுக்குப் பரிபூரண ஆசிகளை நல்குகின்றோம்.

ஒளி என்பது உருவாக்கப்படுவது அணுக்களினால் என்கின்ற அறிவினை ஏற்று விடுங்கள். அணுக்கள் இல்லையென்றால் இயக்கம் இல்லை. அண்டமும், பிண்டமும் அணுவினால் இயங்குகின்றது. அனைத்து அணுக்களும் ஈசத்துகள்கள் அன்று. இருப்பினும் ஈசப் படைப்புக்கள் என்றே உணர வேண்டும். ஆன்ம விடுதலை என்பது அணுக்களின் விடுதலை ஆகும்.

அண்டத்தில் உருவாகின்ற முதன்மை அணுக்களே ஆன்மாவாகும். பரமாத்மாவும், ஆத்மாக்களும் ஒத்தவையாகும். பரந்த விண்ணுலகினிலே பரமாத்மா எனப்படும் அணுக்களின் தொகுப்பினால் உருவாக்கப்படும் பல்வேறு அணுக்கள்யாவும் ஒன்றிணைந்து கோள்களைப் படைக்கின்றன. அணுக்களின் ஆதார ஆற்றல் என்பது ஒளியும் ஒலியுமே ஆகும்.

ஒளி எனப்படும் ஆற்றலானது, ஈர்ப்பு சக்தி நிறைந்த காந்த ஆற்றலினை உடையது. ஒலி எனப்படும் ஓசையானது, கூடிய வெப்ப ஆற்றலினை உடையது. அணுக்கள் யாவுமே ஒன்றோடு ஒன்று உராய்ந்திடும் தருணத்தில், ஒளிர்வினையும் நல்கிடும். பெருத்த ஓசையினையும் நல்கிடும். அணுக்கள் யாவும் ஒன்றோடு ஒன்று உராய்ந்திட்டால் மாத்திரமே, ஒளி எனப்படும் வெளிச்சமானது பரவிடும்.

சூரியக் கோள் என்பது அணுக்களின் உராய்தலின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது. எனில் அதனின்று உருவாகும் பிற கோள்களும் உராய்தலின் மூலமே உருவாக்கப்படுகின்றது. ஒளிச்சிதறல் என்பது மற்ற அணுக்களை உருவாக்கும் திறன் கொண்டதாகும்.

ஒவ்வொரு ஆன்மாவும் சூரியக் கோளின் பிளவினால் உருவாக்கப்பட்டதாகும். அணுக்களின் பிளவினால் உருவான ஆன்மாக்கள் யாவும் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதே இயற்கையின் நியதியாகும். பிளவு கொண்டிடும் அணுக்கள், ஒளி என்கின்ற வெளிச்சத்தினை நல்கி, காந்தச் சக்தி என்னும் ஈர்ப்பு நிலையினையும் வெளிப்படுத்துகின்றது.

மானுட ஆன்மாக்கள் மீண்டும் பரமாத்மாவினை அடைந்துவிட ஓசை என்கின்ற வெப்பச் சக்தியே இயங்கும் தன்மையினை வெளிப்படுத்தி, இயக்கத்தினைத் துரிதமாக்கிடும். அணுக்களைக் குறித்து பூரணமாய் அறிந்திடல்

வேண்டும் எனில் அண்டத்திலே வசித்திடல் வேண்டும். ஆன்மாவானது விடுதலையுற்றால் மாத்திரமே அண்டத்தினிலே நிலைத்திட இயலும். இக்கலியுகத்தின் எல்லையில் வசித்திடும் மானுடர்களால் அண்டத்தின் நிகழ்வுகளைப் பூரணமாய் உணர்ந்து விட இயலாது. ஆன்ம விடுதலை என்னும் இவ்வுயரிய நிகழ்வானது பரமாத்மாவிலிருந்து பிளவுபட்ட அணுக்கள் ஆகிய ஆன்மாக்களை மீண்டும் இணைத்திடும் அபூர்வமான செயலாகும்.

பரமாத்மா என்னும் அணுக்களின் தொகுப்பிலிருந்து பிளவு கொண்டுப் புவியினை அடைந்துவிட்ட உங்களுடைய ஆன்மாக்கள் மீண்டும் ஒன்றிணைந்து பரமாத்மாவினை அடைந்துவிட உதவுவதே உயர் ஆன்மாக்களின் பணியாகும். அணுக்களை அணுக்கள் கொண்டேப் பிளவுறச் செய்வதும், அணுக்களைக் கொண்டே இணைப்பதும் இயற்கை தத்துவங்களாகும்.

இயற்கையினைப் பூரணமாக ஏற்று ஒளி மற்றும் ஓசை என்கின்ற இரு வேறு நிலைகளை உணர்ந்து ஆன்மாவின் விடுதலையினை ஏற்றிடுங்கள். மந்திர ஒலி ஓசை ஒன்றே ஆன்ம அணுக்களை ஒளிப் பலத்தோடு இணைத்திடும் ஆற்றல் கொண்டது. ஏற்றிட்ட மந்திர உபதேசத்தின் மூலம் ஓசையின் துணை கொண்டு உங்களுடைய

ஆன்ம அணுக்களை ஒளி பாலம் எனப்படும் ஒளி நிறைந்த மார்க்கத்தில் செலுத்தி ஈசனை அடைந்துவிட நிறைவினை எய்திடல் வேண்டும்.

பரமாத்மாவிலிருந்து பிளவு கொண்டுப் புவியினை அடைந்துவிட்ட உங்களின் ஆன்மாக்களை ஏற்றிச்சென்று பரமாத்மாவிடமே மீண்டும் ஒப்படைத்து விடவே குருவானவரால் ஒரு ஒளி பாலம் நிறுவப்பட்டுள்ளது. ஒளியினை நோக்கிய உன்னதப் பயணத்தை அருளிடும் ஒளி பாலத்தினை அனுதினமும் போற்றிடுங்கள்.

அணுக்களின் ஒளியினை கொண்டே கொண்டே நிறுவப்பட்டுள்ள ஒளி பாலத்தினை போற்றி, பணிந்து, நல்லாசிகளைப் பெற்று விடுங்கள். உங்களுடைய தனித்த ஒளி வழிப் பாலமானது நிறைவுறாத நிலையில், ஈச மைய உலகம் வரை உங்களை சுமந்து சென்றிடும் ஒளிப் பாலத்தினை உருகிப் பணிந்து ஒன்றெனக் கலப்புற வேண்டும். ஈசக் கலப்பிற்கு ஒளி பாலமே பெருந்துணை ஆற்றிடும். எமது இறுதியான இவ்வாசியுரையை ஏற்று ஆன்மாக்களைப் புனித மார்கத்தில் செலுத்தி உயரிய ஆன்ம விடுதலையும் பெற்று, காலம் உள்ளவரை நிலைத்து ஆற்றல்களைப் பெருக்கிப் பகிர்ந்து இன்புற்று வாழ்ந்திட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

******

Copyright © 2020 Gnanalayam